## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெலிவிடிய திவிதுர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, வெலிவிடிய திவிதுர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கிடைத்திருந்த மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 14,315,000 இற்கான தொகை வருமானச் செலவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொல்கஹவில அகலிய தகனகூடம் நிர்மாணித்தல் தொடர்பான நிர்மாண வேலை கடன்பட்டோர் மீது ரூபா 9,903,901 தொகை மற்றும் எரிகூடம் நிர்மாணிக்கும் நிர்மாண வேலை தொடர்பாக நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மற்றும் நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதி ரூபா 30,000 மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என. | - மேற்படி - |
| (இ) | எத்கும்புர மயானத்தில் புதிதாக வேலி நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 277,640 இற்கான பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என. | - மேற்படி - |
| (ஈ) | பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 106,249 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும் என. | - மேற்படி - |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு விடயமொன்று தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 222,343 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | வித்தியாசங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதி 212 | 19 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,151,424 தொகை இருப்புக் கொள்வனவு இருப்புப் பதிவேடுகளில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முறையான செய்முறை ஒன்றின் படி இருப்புப் பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இருப்புப் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தென் மாகாண மாகாண சபை நிதி மற்றும் நிருவாக விதி 476 மற்றும் 477 | அனைத்து வருடங்களுக்குமாக வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடொன்று மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதன் படி செயற்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதி மற்றும் நிருவாக விதிக்கு இணங்க வாகனக் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.7.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டின் போது ஒரு நாளைக்கு வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் இடையே பிரயாணம் செய்வதற்காக செயலாளரினால் தொகுதிப் போக்குவரத்து வசதிகளின்றி சபையின் வாகனத்தை பயன்படுத்தியிருந்ததுடன் அதன் எரிபொருளுக்காக ரூபா 295,547 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உள்ளுராட்சி ஆணையாளரின் அறிவுரையின் மீது மேற்கொள்ளப்பட்டது என. | கிரயத்தை குறைக்கக் கூடியவாறு வாகனங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 4,820,954 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 3,467,585 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 663,000 | 812,853 | 821,629 | 24,068 | 538,000 | 737,976 | 742,858 | 32,844 |
| வாடகை | 343,200 | 129,540 | 140,680 | (1,400) | 468,200 | 170,505 | 182,065 | 9,740 |
| அனுமதிப்பத் திரக் கட்டணம் | 86,200 | 329,259 | 329,259 | - | 100,200 | 100,403 | 100,403 | - |
| ஏனைய வரு மானங்கள் | 2,058,500 | 6,112,507 | 6,100,679 | 113,723 | 1,829,500 | 3,951,037 | 3,904,742 | 101,895 |
| | 3,150,900 | 7,384,159 | 7,392,247 | 136,391 | 2,935,900 | 4,959,921 | 4,930,068 | 144,479 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் உப பிரிவு 134(1) இணங்க சபையின் அதிகாரப் பிரதேசத்திற்காக வீதவரி விதிப்பதற்காக சபைக்கு முடியாமல் இருந்தது. | வீதவரி விதிப்பதற்காக தற்போது மேற்கொள்ளப்படுகின்றது என. | முன்னேற்றப்பட்ட பிரதேசங்களுக்காக வீதவரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 741,714 தொகை பெறுமதியான 1915 புத்தகங்கள் காணப்படுகின்ற ஹீன்பன்வில நூலகம், ஒரு வாரத்திற்கு இரண்டு நாட்கள் மாத்திரம் திறந்திருப்பதனால் பிரதேச சபையின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் வரையறுத்தலொன்று ஏற்பட்டிருந்தது. | 05 நாட்களும் ஈடுபடுத்தக் கூடிய பெண் உத்தியோகத்தர் ஒருவர் காணப்படாமை என. | பொது மக்களுக்கு உச்சமட்ட சேவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ரூபா 724,649 தொகை பெறுமதியான 29 களஞ்சியப் பண்ட விடயங்களின் பற்றாக்குறை ஒன்றும், ரூபா 64,540 பெறுமதியான 11 விடயங்களின் மிகையொன்றும் காணப்பட்டது. | முறையான செய்முறை ஒன்றின் படி களஞ்சிய இருப்பு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | களஞ்சியப் பண்டங்கள் கொள்வனவு செய்தல் காலரீதியாக பதிவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2022 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 49,000 பெறுமதியான 02 டோனர்கள் பயன்படுத்த முடியாத நிலைமையில் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் அவற்றை பயன்படுத்தக் கூடிய அச்சு இயந்திரமொன்று சபையில் காணப்படவில்லை. | 02 டோனர்களையும் பயன்படுத்துவதற்கு முடியும் என. | தேவைப்பாட்டினை இனங்கண்டு கொள்வனவு செய்ய வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 12 ஏக்கர் 02 ரூட் 39.8 பர்சஸ் தொகைக்கான ரூபா 4,813,752 தொகை பெறுமதியான 15 காணிகளின் உரிமை சபைக்கு சொந்தமாக காணப்படவில்லை. | எதிர்காலத்தில் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | காணிகளின் உரிமையை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தகனகூடத்தின் நுழைபாதையை தார் போட்டு அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலையின் போது உரிய ரேட்கள் பயன்படுத்தப்படாமையால் ரூபா 47,219 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | ரேட்கள் அறிமுகப்படுத்தி இருக்காமையால் இந்த சிக்கல் தன்மை ஏற்பட்டிருந்தது என. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | வதுகஹ இந்திரசேன விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலையின் விளையாட்டு மைதானங்கள் நிர்மாணிக்கும் போது உரிய ரேட்கள் பயன்படுத்தப்படாமையால் ரூபா 101,430 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | DR-009 ரேட் இயந்திரத்தின் மூலமாக அல்லது மனித உழைப்பின் மூலமா மேற்கொள்ளப்படும் என குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என. | -மேற்படி- |
| (இ) | பெக்கோலோடரை பயன்படுத்தி விளையாட்டு மைதானத்தில் மண் வெட்டப்பட்டிருந்த போதிலும் மனித உழைப்பின் மூலம் மண் வெட்டுவதற்காக அறிமுகப்படுத்தியிருந்த ரூபா 1,242 இற்கான ரேட் பயன்படுத்தியிருந்தமையால் ரூபா 193,077 இற்கான தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | பயன்படுத்தப்பட வேண்டிய ரேட் எது என அறிந்திருத்தல் அல்லது அறிவுரை எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை என. | -மேற்படி- |